## திருப்பெரும்புதூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : திருமதி.பி.சி.ஹேமலதா.,எம்.இ.,

**ந.க.எண்**.1436/2024/**எப்1** **நாள்**.23.06.2025

**பொருள்:-** மனைப்பிரிவு – திருப்பெரும்புதூர் நகராட்சி – திருப்பெரும்புதூர் '**அ**' கிராமம் – சர்வே எண்.425/2A, 430/1A & 3, 431/1A, 432/3 & 4, 434/1, 434/2A, 435/1, 435/2A, 436/1A1, 436/1A2, 437/1A-ல் 27943.00 **ச.மீ** பரப்பளவில் தொழிற்சாலை மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

**பார்வை:-**
1) துணை இயக்குநர் (பொ), நகர் ஊரமைப்பு துறை அவர்களின் கடித ந.க.எண்.8Z5VCGX3 /2024/TCP5 நாள்.23.12.2024
2) திருப்பெரும்புதூர் சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தான பத்திரம் எண்.14260/2024, நாள்.11.12.2024.
3) நகர்மன்ற தீர்மானம் எண்.46/2025, நாள்.24.02.2025.

*******

**<u>உத்தரவு :-</u>**

திருப்பெரும்புதூர் நகராட்சிக்குட்பட்ட **திருப்பெரும்புதூர்** 'அ' கிராமம் சர்வே எண். 425/2A, 430/1A & 3, 431/1A, 432/3 & 4, 434/1, 434/2A, 435/1, 435/2A, 436/1A1, 436/1A2, 437/1A-ல் 27943.00 **ச.மீ** நிலப்பரப்பில் தொழிற்சாலை மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி **திருவாளர்கள்.தி சென்னை மேக்கர்ஸ் கோ மற்றும் இரண்டு நபர்கள்** என்பவர்களால் நகர் ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மனுதாரின் விண்ணப்பம் துணை இயக்குநர்(பொ), நகர் ஊரமைப்பு துறை காஞ்சிபுரம் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி, சாலை இடத்தினை திருப்பெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2-ல் கண்டுள்ளபடி **திருவாளர்கள்.தி சென்னை மேக்கர்ஸ் கோ மற்றும் இரண்டு நபர்கள்**, என்பவர் பத்திர பதிவு செய்து திருப்பெரும்புதூர் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்துள்ளனர். தான பத்திர எண்.14260/2024 நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் உத்திரவில் மனைப்பிரிவிற்கு ந.க.எண்.8Z5VCGX3/2024/TCP5 நாள்.23.12.2024 திட்ட அனுமதி எண்.94/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் நகரமன்ற தீர்மானத்தின் படி மேற்கண்ட தொழிற்சாலை மனைகளுக்கு மன்றம் அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ | ரசீது எண்/நாள் |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் | 1,75,000/- | 158/2025-2026 |
| 2 | ஆய்வு கட்டணம் | 10,000/- | 158/2025-2026 |
| 3 | குடியிருப்பு மனை கட்டணம் | 6,000/- | 158/2025-2026 |
| 4 | கூர்ந்தாய்வு கட்டணம் | 28,000/- | 158/2025-2026 |
| 5 | அபிவிருத்தி கட்டணம் | 1,12,000/- | 158/2025-2026 |
| 6 | மனைப்பிரிவின் பராமரிப்பு வைப்புத்தொகை கட்டணம் | 7,00,000/- | 158/2025-2026 |
| 7 | காலிமனை வரி | 10,64,830/- | 159/2025-2026 |
| 8 | குடிநீர் வசதி அமைத்தல் | 8,40,000/- | 160/2025-2026 |
| 9 | வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 27,20,000/- | 160/2025-2026 |
| 10 | நிலப்பயன்பாட்டு கட்டணம் | 45,66,000/- | அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது |

**நிபந்தனைகள்**

1. நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் திட்ட அனுமதி எண்.94/2024, நாள்.16.12.2024-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும்.
2. இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.
3. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநரால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்.
4. மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புலஎண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, நகர் ஊரமைப்பு துறை பொறுப்பேற்காது.
5. தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்
6. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிககாலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும்.

எனவே, மேற்கண்ட இடத்தில் **திருவாளர்கள்.தி சென்னை மேக்கர்ஸ் கோ மற்றும் இரண்டு நபர்கள்** என்பவர்கள் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

23.6.2025

**ஆணையாளர்**

**திருப்பெரும்புதூர் நகராட்சி**

<u>பெறுநர்:-</u>

23.6.25

திருவாளர்கள்.தி சென்னை மேக்கர்ஸ் கோ மற்றும் இரண்டு நபர்கள்

38/40 தரை தளம், நார்த் போக் ரோடு,

தியாகராய நகர், சென்னை

<u>நகல் பணிந்தனுப்படுகிறது:-</u>

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், காஞ்சிபுரம்